தமிழ் 1 (மாதிரி வினாத்தாள்:02)

# Tamil I

72 T I

மூன்று மணித்தியாலம்
மேலதிக வாசிப்பு நேரம்
10 நிமிடம்

<u>அறிவுறுத்தல்கள்:</u> பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**(i)** விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர் இசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்
துறைகெழு கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா உளவே.

(அ) இப்பாடலின் பேசு பொருள் யாது?

(ஆ) தோழி பகற்குறியை மறுத்தற்குரிய காரணத்தை விளக்குக.

(இ) இச் செய்யுளில் வெளிப்படும் பழந்தமிழ்கால இலக்கிய மரபுகளைக் குறிப்பிடுக.

**(12 புள்ளிகள்)**

**(ii)** 'துடி எறி நெறிகளும், துறையும், சுற்றுற
ஓடியெறி அம்பிகள் யாதும் ஓட்டலிர்
கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி எறி, பட' எனா, பெயர்த்தும் கூறுவான்.

(அ) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

(ஆ) குகன் தன் படைகளுக்கு இட்ட கட்டளைகள் யாவை?

(இ) குகனது தலைமைப் பண்பு இப்பாடலில் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக.

**(12 புள்ளிகள்)**

**(24 புள்ளிகள்)**



kalvi.lk

**02.பின்வரும் (அ) கவிதையை அல்லது (ஆ) உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

**(அ) பின்வரும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்
நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி,
நேரங் கழிவ திலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற் கனவில்
தன்னை மறந்தலயந் தன்னில் இருந்தேன்.1

ஆங்கப் பொழுதிலென் பின்பு றத்திலே,
ஆள்வந்து நின்றெனது கண்ம றைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டி யறிந்தேன்,
பட்டுடை வீசுகமழ் தன்னி லறிந்தேன்
ஓங்கி வருமுவகை யூற்றி லறிந்தேன்
ஒட்டு மிரண்டுளத்தின் தட்டி லறிந்தேன்
'வாங்கி விடடிகையை யேடி கண்ணம்மா!
மாய மெவரிடத்தில்?'என்று மொழிந்தேன்.2

சிரித்த ஒலியிலவள் கைவி லக்கியே.
திருமித் தழுவி''என்ன செய்தி சொல்''என்றேன்
''நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்துப் பிரித்துநிதம் மேகம் அளந்தே.
பெற்ற நலங்கள் என்ன?பேசுதி''என்றாள்.3

''நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்
பிரித்துப் பிரிந்துநிதம் மேகம் அளந்தே,
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன் றில்லை
சிரித்த ஒலியினிலென் கைவி லக்கியே,
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.''4



kalvi.lk

(i) இக்கவிதை எத்தகைய பாவனையில் அமைந்துள்ளது?

(ii) இக்கவிதையின் பாடு பொருள் யாது? விளக்குக.

(iii) கவிஞரின் காதல் வெளிப்படும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

(iv) பாடலில் வெளிப்படும் பாரதியின் கற்பனைத்திறனை எடுத்துக்காட்டுக.

**அல்லது**

**(ஆ) பின்வரும் உரைப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை, பொருளாதார நிலை,சமூகவாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்ப்படுத்திக்கொள்ள முயல்வாராயின் முதலிலே தாமெய்த வேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளுனுடைய கருத்தினை நுனித்து நோக்கி அமைக்குந்தரத்தது. இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும், பல தேசத்தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற்படியும் படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்க வல்ல உண்மைக் கவியாவான். இத்தகைய ஒரு கவியைத் தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப்பயனேயாகும். கவியரசராகிய சுப்ரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பல
வருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது. இத்தகைய கவிசிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலக மாதாவாகிய பராசக்தியை வேண்டிக்கொள்வோமாக.

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் மிகப் பலவிருக்கின்றன.நியாயம்,வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கின்ற வேறுவகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல்நாட்டாசிரியர்கள் தம்மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழிபெயர்ப்பும்,உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுண்டு. தமிழிலோவென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிற்பம், ரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம்,காந்தருவவேதம், கணிதம், தருக்கம் என்றின்னன பலவாய துறைகளிலே கடல்போல விரிந்துகிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்தெழுதினால் அதனால் விளையக்கூடிய நலத்துக்கு எல்லை கூறமுடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழிற் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த்தொண்டாகும்.

(i) உத்தமக் கவிகளுனுடைய கருத்தாக அமையும் சிந்தனை யாது?

(ii) கட்டுரையாசிரியர், 'உண்மைக் கவி'யின் ஆற்றலாகக் கருதுவது எதனை?

(iii) சிறந்த தமிழ்த்தொண்டாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது யாது?

(iv) கட்டுரையாசிரியர் இப்பகுதியில் கையாண்டுள்ள மொழிநடையின் பண்புகளை எடுத்துக்காட்டுக.

**(16 புள்ளிகள்)**



kalvi.lk

## பகுதி II

03. **பெரியாரைத் துணைக்கோடல்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பெரியாரது இலக்கணமும் துணைக்கொள்வதன் அவசியமும்

(ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு

(இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்கள்

(ஈ) பெரியாரைத் துணைக்கோடாமையின் குற்றங்கள்

(உ) வள்ளுவர் தாம் கருதியதை விளக்கக் கையாண்ட அணிகள்

**(20 புள்ளிகள்)**

04. **கம்பராமாயணம் குகப்படலத்தில்** குகன் தனது படையினருக்குக் கூறிய வார்த்தைகளில்,

(அ) குகன் தன் படைகளைத் தயார்ப்படுத்துதலும்

(ஆ) குகனது, வீரமும் இராமன் மீது கொண்ட பக்தியும்

(இ) உவமை அணியினைக் கையாள்வதில் கம்பனது கவியாற்றலும்

வெளிப்படுமாற்றை விளக்குக.

**(20 புள்ளிகள்)**

05. புதுமைப்பித்தனின் **தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை** என்ற கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(அ) இக்கட்டுரை மூலம் ஆசிரியர் கூறவந்த விடயம் யாது?

(ஆ) நாகரிகம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் என்ன?

(இ) நகரவாசிகள் தமது ஓய்வு காலத்தில் கிராமத்திற்குச் சென்றாலும் அவர்கள் கிராம வாழ்வை வாழமாட்டார்கள் என்பதற்கு ஆசிரியர் தரும் நியாயப்பாடுகள் எவை?

(ஈ) கிராம மக்களின் சிறப்புக்களாகக் கட்டுரை ஆசிரியர் கூறுபவை யாவை?

**(20 புள்ளிகள்)**

**06.சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில்,**

(அ) இளங்கோவடிகள் வெளிப்படுத்த விழைந்த விடயம் யாது?

(ஆ) கோவலன் என்ற கதாபாத்திரத்தின் நிலை பற்றிக் குறிப்பிடுக.

(இ) கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறிய அறக்கருத்துக்கள் யாவை?

(ஈ) விதியின் வலிமைமையும்,வாழ்வில் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகளாகவும் கூறப்படுபவை யாவை?

**(20 புள்ளிகள்)**

**07.எஸ்.பொ.வின் தேர்** சிறுகதையில் வெளிப்படும் வாழ்வியல் அம்சங்களையும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும் எடுத்துக்காட்டுக.

**(20 புள்ளிகள்)**

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **குறுந்தொகை, இளமை பாரார்...** எனும் பாடலின் தலைவியின் பிரிவுத் துயர் வெளிப்படுமாறு

(ஆ) **புறநானூறு ,ஒரு நாள் செல்லலம்...** எனும்பாடலில் அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடை மாண்பும் சிறப்பும் வெளிப்படுமாறு.

(இ) **மாணிக்கவாசகரின் கோயில் திருப்பதிகத்தில்** வெளிப்படும் இறைவனது இயல்புகள்.

(ஈ) **தேம்பாவணி காட்சிப்படலத்தில்** வெளிப்படும் இயேசு கிறிஸ்துவினதும், அன்னை மரியாளினதும் சூசையினதும் பெருமைகள்

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page